

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் நாமக்கல் கிழக்கு மாவட்ட அலுவலகமான கலைஞர் அறிவாலயம் இனமானப் பேராசிரியர் கூட்டரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு கூட்டப் பொருள் குறித்தும், “இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல்” என்ற தலைப்பில் தேர்தலுக்கான திண்ணை பிரச்சாரம் குறித்தும் விளக்கம் அளித்து பேசினார். இதில் மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன், வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.ராமலிங்கம், சேந்தமங்கலம் பொன்னுசாமி மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது!

# தமிழ்நாட்டு மக்களின் நலன் காக்கும் நிதிநிலை அறிக்கை!

## எர்ணாவூர் ஏ.நாராயணன் அறிக்கை!

சென்னை, பிப். 27–

2024 – 2025 ஆம் ஆண்டுக்கான தமிழக பட்ஜெட் சட்டமன்றத்தில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் தாக்கல் செய்து உரையாற்றியுள்ளார். தமிழ்நாட்டு மக்களின் நலன் காக்கும் பட்ஜெட்டாக அது அமைந்துள்ளது என தமிழ்நாடு அரசுக்கும், முதல்வர் அவர்களுக்கும் சமத்துவ மக்கள் கழக நிறுவன தலைவர் எர்ணாவூர் ஏ. நாராயணன் பாராட்டு தெரிவித்து அறிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:–

தமிழ்நாடு அரசு தாக்கல் செய்துள்ள பட்ஜெட்டில் குடிசையற்ற தமிழகத்திற்கு கிராமங்களில் 8 லட்சம் கான்கிரீட் வீடுகள் திட்டம், முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் பெயரில் 5 லட்சம் ஏழை குடும்பங்களில் வறுமை ஒழிப்பு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மூன்று லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு மாதம் ரூபாய் 1000 திட்டம், வரும் நிதியாண்டில் இல்லம் தேடி கல்வி திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு தமிழக ஐந்து முக்கிய நகரங்களில் 1000 இடங்களில் இலவச வைபை வசதி அறிமுகப்படுத்துதல், காலை உணவு திட்டத்தில் மேலும் 2.5 லட்சம் மாணவர்களுக்கு விரிவுபடுத்த 600 கோடி நிதி ஒதுக்கீடு, ஒரு லட்சம் மாணவர்களுக்கு கல்வி கடன் திட்டம் ,

தென் மாவட்டமான தூத்துக்குடி பகுதியில் இருநூறு ஏக்கர் நிலப்பரப்பில் விண்வெளி தொழில் பூங்கா, வட சென்னை வளர்ச்சி திட்டத்திற்கு ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு, மூன்றாம் பாலினத்தோரின் கல்வி படிப்புக்கான முழு செலவையும் தமிழக அரசே ஏற்கும் திட்டம், ஆயிரம் கோடியில் தமிழக முழுவதும் பள்ளி கட்டமைப்பு உருவாக்கும் திட்டம், இளைஞர்களுக்கு ஐம்பதாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு திட்டம் என பல திட்டங்களை அறிவித்திருக்கிறது.

மக்களுக்கு பயனளிக்க கூடிய எண்ணற்ற திட்டங்களால் தமிழகத்தின் வளர்ச்சி மற்ற மாநிலங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகவும், தொலைநோக்கு திட்டமாக திகழும் பட்ஜெட்டாக அமைந்துள்ளது. தமிழர்களின் வாழ்வை உயர்த்தும் பட்ஜெட்டாகவும், பொருளாதாரத்தில் தமிழகம் முன்னோக்கி செல்லும் பட்ஜெட் ஆகவும்,

திராவிட மாடல் அரசின் இந்த நிதி நிலை அறிக்கை தமிழகத்தில் கல்வி, தொழில், பொருளாதாரம், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஆகியவற்றை தரம் உயர்த்தும் வகையில் இந்த பட்ஜெட் அமைந்துள்ளது.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



அரியலூர் மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம், மாவட்டக் கழக அலுவலகத்தில் கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டு உரையாற்றினார். உடன் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்தியாவிலேயே முதன்முறையாக

# பிரத்யேகமாக முதியோருக்கான சிறப்பு மருத்துவமனை!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் பிரதமர் நரேந்திர மோடி காணொலி மூலம் திறந்து வைத்தார்!

சென்னை,பிப்.27-

சென்னை, கிண்டியில் நேற்று (25.02.2024) தேசிய முதியோர் நல மருத்துவ மையத்லித் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில், பிரதமர் நரேந்திரமோடி காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

**மருத்துவமனை சிறப்புகள் மற்றும் வசதிகள்**

இந்தியாவின் வயது முதிர்ந்தோருக்கான மருத்துவமனை இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. 2007 ஆம் ஆண்டு தொடங்கி பல்வேறு நிலைகளைக் கடந்து கட்டிடப்பணிகள் நிறைவுற்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடர்ச்சியாக எடுக்கப்பட்ட முயற்சி களுக்குப்பின் ஒன்றிய அரசின் பிரதமர் அவர்களால் இன்று மக்களின் பயன்பாட்டிற்காக இம்மருத்துவமனை அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. 200 படுக்கைகள் கொண்ட இம்மருத்துவமனை 276 புதிய பணியிடங்கள் உருவாக்கப்பட்டு தற்போது பயன்பாட்டிற்கு வந்திருக்கிறது.

தமிழ்நாடு அரசின் சார்பில் 8.64 ஏக்கர் நிலப்பரப்பு ஆர்ஜிதம் செய்யப்பட்டு இப்பணிகள் முடிவுற்று இம்மருத்துவமனை தற்போது பயன்பாட்டிற்கு வந்துள்ளது. இம்மருத்துவமனையின் பல்வேறு வசதிகளுடன் கூடிய மருத்துவ சிகிச்சைகள் வயது முதிர்ந்தவர்களுக்கு அளிக்கப்படவிருக்கிறது. தினசரி இயங்கும் புறநோயாளிகள் பிரிவு தொடங்கப்படவுள்ளது. சிறப்பு சிகிச்சை பிரிவுகள், பிரத்யேக நோய்களான அறிவுத்திறன் குறைபாடு, நிலை தடுமாறி விழுதல், எலும்பு தேய்மானம், சிறுநீர் கட்டுப்படுத்த முடியாமை, நாட்பட்ட வலி முதலிய வற்றிற்கான நோய்கள் கண்டறிதல், புனர்வாழ்வு சிகிச்சைகள் ஆகியவை இம்மருத்துவமனையில் 24 மணி நேரமும் அளிக்கப்படவுள்ளன. சிறப்பு பிரிவுகளான இருதயநோய் மருத்துவம், சிறுநீரகம், மூளை நரம்பியல், வயிறு மற்றும் சிறுகுடல், மனநல மருத்துவம், இயன்முறை மருத்துவம் மற்றும் புனர்வாழ்வு மருத்துவம், அரசின் ஆயுஷ் மூலம் வழங்கப்படும் சேவைகளும் இம்மருத்துவமனையில் கிடைக்க பெற உள்ளன.

பொது அறுவை சிகிச்சை, எலும்பியல் அறுவை சிகிச்சை, கண் காது மூக்கு, தொண்டை அறுவை சிகிச்சைகள், சிறுநீரக அறுவை சிகிச்சைகள் முதலான முக்கிய சேவைகளும் முதியோர்களுக்கு இம்மருத்துவமனையில் கிடைக்க உள்ளது. இங்கே அதிநவீன மருத்துவ தொழில்நுட்ப உபகரணங்களான எக்ஸ்ரே, சிடி ஸ்கேன், அல்ட்ரா சவுண்ட், ஸ்கேன் போன்ற வசதிகளும் இம்மருத்துவமனையில் பொருத்தப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் இரத்த மாதிரிகளும், திசு பரிசோதனைகளும் இம்மருத்துவமனையில் சிறப்பாக செய்யப்பட உள்ளன.

**முதியோர் இளைப்பாறுவதற்கு நூலகம்**

இம்மருத்து வமனை திறந்து வைக்கப்படும்போதே ரூ.1 கோடி மதிப்பிலான Essential Drugs என்று சொல்லக் கூடிய அவசர, அவசிய மருந்துகள் கையிருப்புகள் உறுதிப் படுத்தப்பட்டிருக்கிறது.

அந்தவகையில் இம்மருத்துவமனை தற்போது புதிய வசதிகளுடன் தற்போது பயன்பாட்டிற்கு வந்துள்ளது. 200 படுக்கைகள் மட்டுமல்லாமல் 40 தீவிர சிகிச்சை படுக்கைகள், 20 கட்டணப்படுக்கைகள் என்கின்ற வகையில் கட்டண அறைகளும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த கட்டணப் படுக்கைகள் பொறுத்தவரை ஒவ்வொரு அறையிலும் குளிர்சாதன அறை, தொலைக்காட்சிப் பெட்டி, ஷோபா, மேசை மற்றும் நாற்காலி, பீரோ போன்ற வசதிகளுடன் ஒவ்வொரு அறையும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த அறைகளின் வாடகையாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலைப் பெற்று குறைந்த அளவிலான வாடகையாக ரூ.900 என்கின்ற வகையில் நிர்ணயிக்கப்படுகிறது. அந்தவகையில் 20 அறைகளும் பயன்பாட்டிற்கு வருகிறது. முதியோரைப் பொறுத்தவரை மருத்துவத்திற்கு வருபவர்கள் பார்வை திறன் குறைபாடு, ஞாபக சக்தி போன்ற பல்வேறு சிகிச்சைகளு க்கான வருபவர்கள் 24 மணிநேரமும் படுக்கை அறைகளில் தங்குவது அவசியமற்ற ஒன்று என்பதாலே மாலை நேரங்களில் ஓய்வு எடுப்பதற்கும், இளைப்பாறுவதற்கும் வசதியாக நூலகம் அமைக்கப்பட்டிருக்கிறது. நூலகம் மட்டுமல்லாமல் ஓய்வு நேரத்தை சிறப்பாக பயன்படுத்திக் கொள்ளும்வகையில் கேரம் போர்டு, செஸ் பலகைகள், பல்லாங்குழி போன்ற தமிழர்களின் விளையாட்டுகள் தொடர்பாகவும் அமைக்கப்பட்டிருக்கிறது. இன்று சிகிச்சை வந்திருக்கும் முதியோர்களுக்கு அட்மிஷன் அட்டை வழங்கப்பட்டு மருத்துவமனையில் தற்போது அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். ஆக இந்தியாவின் முதல் பிரத்யேக வயது மூத்தவர்களுக்கான மருத்துவமனை இன்று முதல் பயன்பாட்டிற்கு வருகிறது என்பது தமிழ்நாட்டிற்கு கூடுதல் முயற்சி.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர்.தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் காரப்பாக்கம் கணபதி, அரவிந்த் ரமேஷ், பிரபாகர் ராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி மதிப்பிற்குரிய துணை மேயர் மகேஷ்குமார், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, உணவு பாதுகாப்புத்துறை ஆணையர் ஆர்.லால்வேனா, தேசிய சுகாதார குழும இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதிஷ், தேசிய சுகாதார ஆணையம் - இயக்குநர் திருமதி.லதா, மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், சென்னை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர்கள் துரைராஜ், கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் கலந்து கொண்டனர்.

# விழுப்புரம் மாவட்டம் – திண்டிவனம் அருகே மின்சாரம் தாக்கி

# உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை,பிப்.27-

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அருகே மின்சாரம் தாக்கி உயிரிழந்த சிறுவனின் பொற்றோருக்கு நிதியுதவி வழங்கி முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம் மற்றும் நகரம், பெலாகுப்பம் ரோடு, பாரதிதாசன் பேட்டையைச் சேர்ந்த செல்வன். தேவேந்திரன் (வயது 9) த/பெ. மாரி என்பவர் கடந்த 23.02.2024 அன்று மாலை குடிநீர் தொட்டியில் தண்ணீர் நிரப்புவதற்காக மின்மோட்டாரைப் பயன்படுத்தும்போது எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி மயங்கி கீழே விழுந்து, உடனடியாக சிகிச்சைக்காக அருகிலுள்ள திண்டிவனம் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

இவ்விபத்தில் உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது பெற்றோருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# திருவாரூர் - நன்னிலம் தொகுதிகளில் பாகநிலை முகவர்கள் கூட்டம்!

## பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.- ஏ.கே.எஸ்.விஜயன் பங்கேற்பு

திருவாரூர்,பிப்27.

திருவாரூர் மாவட்டத்தில் திருவாரூர் மற்றும் நன்னிலம் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பாகநிலை முகவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் திருவாரூர் மற்றும் நன்னிலம் பகுதிகளில் நடைபெற்றது. இதில் சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட செயலாளருமான பூண்டி.கே.கலைவாணன், நன்னிலம் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், திருவாரூர் தொகுதி பொறுப்பாளர் பழஞ்சூர் செல்வம் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

கழகத் தலைவர் திராவிட நாயகர் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களின் படி திருவாரூர் தொகுதி, நன்னிலம் தொகுதி பாகநிலை முகவர்கள் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. வரவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் கழக கூட்டணி வெற்றியை உறுதிப்படுத்தும் நோக்கில் தேர்தல் பணியாற்ற நடைபெற்ற கூட்டங்களில் தமிழ்நாட்டில் தளபதி அவர்களின் ஆட்சியில் பொதுமக்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் அறிய திட்டங்களையும்,அரசின் சாதனைகளையும், நிதிநிலை அறிக்கையினையும் மக்களிடம் எடுத்து செல்லும் நோக்கில், இல்லந்தோரும் ஸ்டாலினின் குரல் என்கிற திண்ணைப் பிரசாச்ரத்தில் ஈடுபடுவது.

கழக தலைவர் பிறந்த நாளாம் மார்ச் 1 இளைஞர் எழுச்சி நாளைமாவட்டம் முழுவதும் எழுச்சியோடு கொண்டாடி கழக கொடி ஏற்றியும், ஏழை எளிய மக்களுக்கும்,மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குவது எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலும் ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு போதுமான நிதிகளை வழங்காத நிலையிலும், முதல்வர் தளபதி அவர்கள் தனது நிர்வாக திறத்தால் பொதுமக்களுக்கான திட்டங்களை தொய்வின்றி கொண்டு செல்லும் சிறப்புக்களையும், பெண்கள் முன்னேற்றத்தில் கழக ஆட்சியின் சீர்மிகு திட்டங்களை யும், வீடுகள் தோறும் திண்ணைப்பிரசாரங்களில் எடுத்து சொல்லவேண்டும் எனவும் பாகநிலை முகவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இந்த கூட்டங்களில் மாவட்டபொருளாளர்மு. வெங்கடேசன், ஒன்றிய செயலாளர்கள் ஆர்.பாலச்சந்திரன், புலிவலம் ஏ.தேவா, சேகர் கலியபெருமாள், பால.ஞானவேல், ஐ.வி.குமரேசன், நகரசெயலாளர்கள் வாரை.எஸ்.பிரகாஷ், எஸ்.வி.பக்கிரிசாமி, பேரூர் செயலாளர் பூண்டி. கே.கலைவேந்தன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கோ.செல்வம், நன்னிலம் தொகுதியில் ஒன்றிய செயலாளர் வீ.அன்பரசன், ஜோதிராமன், பிரபாகரன், வே.மனோகரன், கேப்டன் செல்வராஜ்,நகர செயலாளர்கள் ப.சிவநேசன், தமிழ் சேரன், பக்கிரிசாமி,பேரளம் தியாகுமாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எஸ்.குமார் மற்றும் வாக்குச்சாவடி நிலை முகவர்கள், கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் த.அ.நாகராஜ் தலைமையில் இன்று ( 27.2.2024 - செவ்வாய்க் கிழமை) காலை 10.00 மணியளவில் ஸ்ரீ தேவராஜா திடல்,

பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை, சுங்கச்சாவடி அருகில் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், முன்னிலையில் நடைபெற உள்ளது.

தேர்தல் ஒருங்கிணைப்பாளர்கள், பாக முகவர்கள் (BLA2) அனைத்து அணிகளின் தலைவர், துணைத் தலைவர்கள், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், மாவட்ட ஊராட்சி குழு, ஒன்றிய குழு, நகராட்சி, பேரூராட்சி தலைவர், துணைத் தலைவர், கவுன்சிலர்கள், உள்ளிட்ட இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், வார்டு, வட்டக் கழக செயலாளர்கள், கிளை செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 1. கடந்த 23.02.2024 அன்று காணொளி காட்சி வாயிலாக நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் கழக தலைவர் தளபதியார் அவர்கள் வழங்கிய ஆலோசனைகளை குறித்து.

2. மார்ச் 1 கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் குறித்து.

3. நாடாளுமன்றத் தேர்தல் குறித்து.

4. கழக ஆக்கப்பணிகள்.

**தே.மதியழகன் எம்.எல்.ஏ.**
செயலாளர்
கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க.

 க.பரமத்தி ஒன்றியக் கழகச் செயலாளர்

# கே.கருணாநிதி மகள் இலக்கியா மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி !

சென்னை. பிப்.27-

கரூர் மாவட்டம், க.பரமத்தி தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் கே.கருணாநிதியின் மூத்த மகள் திருமதி பி.இலக்கியா (வயது 33) 25.02.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று அதிகாலை 4.00 மணியளவில் உடல்நலக்குறைவு ஏற்பட்டு சிகிச்சைக்காக கரூரில் உள்ளதனியார்மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்தார்.

இவரது கணவரின் பெயர் பி. பிரசாத் (வயது 35). மேலும் ஒரு மகள் பி.சாரா (வயது 6) மற்றும் ஒரு மகன் பி.பிரிதிவ் (வயது 3) உள்ளனர்.

தகவல் அறிந்ததும் கழகத்தினர் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.



கடலூர் மாநகர செயற்குழு கூட்டம் மற்றும் வார் ரூம் திறப்பு விழா மாநகரக் கழக செயலாளர் கே.எஸ். ராஜா தலைமையில் நடைபெற்றது. இதில் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், கழக தேர்தல் பணிக் குழு செயலாளர் இள புகழேந்தி, மாநகர மேயர் சுந்தரி ராஜா முன்னிலை வகித்தனர். கடலூர் தொகுதி பார்வையாளர் அங்கையற்கண்ணி சிறப்புரையாற்றினார், கழக சட்டத்துறை செயலாளர் என். ஆர். இளங்கோ எம்.பி,, கடலூர் நாடாளுமன்ற தொகுதி, சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதி வார்ரூம்களைத் திறந்து வைத்து, வாக்குச்சாவடி பாகமுகவர் செயல்பாடுகள் பற்றி விளக்க உரையாற்றினார். முன்னாள் எம்.எல்.ஏ., கே. எஸ் .ரவிச்சந்திரன், வழக்கறிஞர் சூர்யா வெற்றி கொண்டான் .ஜே.பச்சையப்பன் வழக்கறிஞர்கள் பி.அருள் ஜோதி, எஸ்.ராஜதுரை மாநகர அவைத்தலைவர் பழனிவேல், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கார்த்திகேயன் உள்ளிட்ட மாநகர கழக நிர்வாகிகள், வழக்கறிஞர் சங்க நிர்வாகிகள், சார்புஅணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்,

க.பரமத்தி தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர்

# கே.கருணாநிதி மகள் பி.இலக்கியா மறைவு!

## முதல்வர்-தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, பிப்.27–

கரூர் மாவட்டம் க.பரமத்தி தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் கே.கருணாநிதியின் மகள் திருமதி. பி. இலக்கியாவின் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:–

கரூர் மாவட்டம் க.பரமத்தி தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் கே.கருணாநிதியின் மகள் திருமதி பி.இலக்கியா மறைந்த செய்தி அறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.

தனது அன்பு மகளை இழந்து தவிக்கும் ஒன்றியக் கழகச் செயலாளர் கே.கருணாநிதிக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.





தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் காரிமங்கலம் மேற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் கே.மனோகரன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள இல்லந்தோறும் ஸ்டாலின் குரல் பிரச்சார கூட்டங்கள் உள்ளிட்ட கழக பணிகள் குறித்து அறிவுறுத்தி சிறப்புரை ஆற்றினார்.கூட்டத்தில் மாநில நிர்வாகி சூடப்பட்டி சுப்ரமணி, மாவட்ட துணைச் செயலாளர்கள் வழக்கறிஞர். ஆ.மணி, கிருஷ்ணகுமார், மேற்கு மாவட்டப் பொருளாளர் முருகன் மற்றும் ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.